**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**தேதி: 18.11.2025**
**OS.No.71/2019**
**வழக்கு சாட்சி PW.1– பிச்சை , த/பெ. பாலுச்சாமி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

தாவா சொத்து தொடர்பாக OS.No.188/2005 என்ற எண்ணில் இந்த வழக்கின் பிரதிவாதியான முருகானந்தத்தின் அப்பா பழனிச்சாமி மீது நான் ஒரு வழக்கு தொடுத்திருந்தேன் என்றால் சரிதான். OS.No.188/2005 என்ற வழக்கு தள்ளுபடியான விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது . இந்த வழக்கு தாவா சொத்து சம்பந்தமாக பழனிச்சாமி எனது அப்பா பாலுச்சாமி மீது வழக்கு தொடுத்து அதில் பழனிச்சாமிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான் , அதை எங்களை விசாரிக்காமல் கொடுத்துவிட்டார்கள் . இந்த வழக்கின் தாவா சொத்தை பிரதிவாதியின் தகப்பனார் கிரையம் வாங்கி அதை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல . அசல் வழக்கான 157/2005 பழனிச்சாமி எனது அப்பா மீது தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் அமைக்கப்பட்டு அவரது அறிக்கையில் தாவா சொத்து பழனிச்சாமி வசம் உள்ளதாக அறிக்கை சமர்பித்துள்ளார் என்றால் சரியல்ல, என்வசம்தான் தாவா சொத்து உள்ளது.

தாவா சொத்தில் பிரதிவாதி வீடு கட்டி, அதில் மின்சார இணைப்பு பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல . என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் 05.11.2012 ல் வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். ஏற்கனவே எனக்கு எதிராக தீர்ப்பான இடத்திற்கு நான் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல . எனக்கு வழங்கப்பட்ட செல்லாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் ஏற்கனவே எனக்கு எதிராக தீர்ப்பான சொத்து தொடர்புடைய ஆவணம்

என்பதால் அது செல்லாது என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 ஆவணம் இந்த வழக்கு தாக்கல் செய்யவேண்டி என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் அப்பாவிற்கு பூர்விக பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அதை அவர்கள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல . ஏற்கனவே தீர்ப்பான சொத்திற்கு நான் வழக்கு தொடுத்துள்ளேன் என்றாலும், என் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.11.18 15:56:13 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.